# ஆத்ம ஜோதி



சுந்தரமூர்த்தி சுவாமிகள்

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ பெருமொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ"

ஓம்

# ஆத்ம ஜோதி

" எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே." —சுத்தானந்தர்.


| ஜோதி 3 | கர-ஆடி-மீ | சுடர் 9 |
|---|---|---|


## பொருளடக்கம்:


| | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | திருத்தொண்டத்தொகை | சுந்தரர் | 237 |
| 2 | சுந்தரமூர்த்திசுவாமிகள் | | 238 |
| 2 | மீளா அடிமை | ஆசிரியர் | 239 |
| 4 | வள்ளியும் முருகனும் | வ. சு. செங்கல்வராயபிள்ளை | 242 |
| 5 | பொன்மொழி | கோ. வை. ஆறுமுகபக்தர் | 242 |
| 6 | தூயநற்சிந்தனைக்களஞ்சியம் | சிவானந்தர் | 244 |
| 7 | பேரம்பித்தன் | முத்து | 245 |
| 8 | சுந்தரர்மணிமொழிகள் | | 248 |
| 9 | உயரிய தத்துவங்கள் | சுந்தரம்மாள் | 250 |
| 10 | சைவக் ஒழுக்கமும் | சர்மா | 252 |
| 11 | நன்றிக்கடன் | சரஸன் | 255 |
| 12 | இனிமை | பித்துக்குளி | 256 |
| 13 | இறைவன்ருளும் ... | ச. மு. பிள்ளை | 259 |
| 14 | சுந்தரமூர்த்தி வணக்கம் | பரமகம்பசதாசன் | 261 |
| 15 | காத்தருள் புரிக | வாசுதேவன் | 262 |
| 16 | அடியார்கள் மகிமை | மௌனசாது | 263 |
| 17 | சரஸ்வதி தோத்திரம் | பவானி | 264 |



ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாதவெளியீடு ]

ஆயுள் சந்தா ரூ. 75/-வருடச்சந்தா ரூ. 3/- தனிப்பிரதி ச. /30

" ஆத்ம ஜோதி நிலயம் " நாவலப்பிட்டி. (இலங்கை)


# திருத்தொண்டத்தொகை

(சுந்தரர்)

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன் மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

இம்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் எல்லார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாரால்
மண்புகழ அருட்டுறையான் ஓலை காட்டி
மணம்விலக்க வன்தொண்டாய் அதிகை சேர்ந்து
நண்பினுடன் அருள்புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத் தொண்டத் தொகை அருளாற் **செப்பினாரே.**

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னாச் செய்து
தப்பில்முது குன்றர்தரும் பொருள்ஆற்றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பில்தனித் தூதுவந்தா றுடுகீறி
உறுமுதலை சிறுமதலை உமிழநல்கி
மெய்ப்பெரிய களிறேறி அருளாற்சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

(திருத்தொண்டர் புராணசாரம்)

எழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமா யென்றுமுன்னீ சொன்னபெருஞ் சொற்பொருளை
யாழநினைத் திடிலடியே னருங்கரணங் கரைந்துகரைந்
தூழியிலின் புறுவதுகா ணுயர்கருணைப் பெருந்தகையே.

பேரூரும் பரவைமனப் பிணக்கறவெம் பெருமானை
யூரூரும் பலபுகல வோரிரவிற் றூதனெனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதோறு நடப்பித்தா
யாரூர நின்பெருமை யயன்மாலு மளப்பரிதே.

(இராமலிங்க **சுவாமிகள்**)

## மீளா அடிமை.

(ஆசிரியர்.)

அடிமை என்றால் தொண்டானவன் தொண்டு எனப் பொருள்படும். அடிமை என்ற சொல்லைப் பார்த்த உடனே ஒரு காலத்திலே ஆங்கிலேயர் செய்த அடிமை வியாபாரம் ஞாபகத்திற்கு வருகிறது. அதுமாத்திரமா? நாமெல்லாம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்தோமே அவையெல்லாம் ஞாபகத்திற்கு வருகின்றன. அவையெல்லாம் பழைய விஷயங்கள். இப்போ நாம் சுதந்தர மக்கள்.

பெற்ற சுதந்தரத்தில் மகிழ்ச்சி. ஆழ்ந்து ஆலோசித்தால் எது சுதந்தரம் என்பதற்கு விடை கூறமாட்டாதவராய் இருப்போம். உடல் சுதந்தரமுண்டா? அப்படியென்ன கேட்கிறீர்கள்? இன்றைய வாழ்க்கை எவ்வளவு சொகுசான வாழ்க்கை. வீட்டுக்கொரு மோட்டார். கால்கள் நடந்தறியா? உடல், தான் நினைத்தபடி வளர்ந்து முருக்குப்போல் பிரயோசனப்படுகிறது. வீட்டுக்கொரு சோம்பேறிக் கதிரை. நிமிர்ந்து நடந்த மனிதன் அரைவட்டத்தில் வளைந்து நடக்கிறான்.

உணவில் எவ்வளவு சுதந்தரம். எல்லாம் மேல் நாட்டிலிருந்து தகரத்தில் அடைத்து வந்தவை. அவற்றோடு புதிய நோய்களும் இறக்குமதியாகின்றன. அவற்றுக்கு மருந்தும் அதன் பின்னே வேறோர் கப்பலில் வருகின்றன. மருந்துக்கு அடிமையாகிய உடல் வலிமை பெற விரும்புகிறது. சீவசத்துக் குளிகைகள் அதன் பின்னே வருகின்றன. சாதாரண உணவுகள் சமிக்கும் சக்தியே மனித உடலில் காணோம். சீவசத்துக் குளிகைகளுக்காக உடலில் உயிர் ஊசலாடுகிறது. அயலவனுக்குப் பேசாது, இருந்தாற்போல் கூண்டைவிட்டுக் கிளி பறந்துவிடுகிறது. காரணம் இருதயப் பலவீனம் என்று பெரிய பட்டதாரி வைத்தியர்கள் தீர்ப்புக் கூறுகிறார்கள்.

உள்ளத்தின் சுதந்தரமோ அற்புதமானது. ஐம்புலவேடருக்கு அடிமைப்பட்டது உள்ளம். இன்றைய உலக நிகழ்ச்சி

கள் காட்சிகள் யாவும் எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றியது போல் மனவேகத்தை மேலுங்கூட்டுகின்றன. உடலும் உள்ளமும் உலகத்துக்குள்ளே மீளா அடிமை. உயிர் என்ன செய்யும் பாவம். தானே தானாக நின்று பார்த்துக்கொண்டிருக்கிறது.

உடலையும் உள்ளத்தையும் உண்மைப் பொருளுக்கே அடிமையாக்கி உயிரை உயரச் செய்யவே மகான்கள் வழிகாட்டினர். அடிமை என்றதும் ஆண்டான் இருக்கவேண்டுமே. அவன்தான் ஆண்டவன் மற்றைய ஜீவ பிராணிகளெல்லாம் அடிமைகளே. ஐந்தறிவுவரையிலுள்ள ஜீவராசிகளுக்கு இத்தொடர்பு விளங்க முடிவதில்லை. அதனால் அவை புலனுணர்ச்சிகொண்டு வாழ்ந்து அதனால் மடிகின்றன. அறிவிற் குறைந்த மனிதனும் அப்படியே வாழ்ந்து மனித விலங்காக மடிகிறான்.

அறிவுள்ள மனிதன் தன்னைப்பற்றியும் தனக்கு மேற்பட்ட சக்தியைப்பற்றியும் சிந்திக்கிறான். 'என்னால் உலகில் ஆவதொன்றுமில்லை' என்று உணர்ந்து ஆணவம் நீங்கப் பெறுகிறான். ஆணவம் நீங்கிய உடனே ஆண்டவனிடத்தில் பணிவு ஏற்படுகிறது. அப்பணிவு ஏற்பட்டதும் நான் அடிமை; ஆண்டவனின் அடிமை; ஆண்டவனின் அடிமைக்கும் அடிமை; என்று பணிவு அளவினை மீறுகிறது. அப்போ உள்ளத்தில் ஆண்டவனை நீங்கி இருக்க முடியாத தன்மை ஏற்படுகிறது. அவனை நினையாத போதெல்லாம் உள்ளம் இருண்டுவிடுகிறது. இதனால் மீளா அடிமையாக இருக்கவே விரும்புகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாருக்குக் கொடுத்திருந்த வாக்கை மீறித் திருவொற்றியூரை நீங்கினார். உடனே கண்பார்வைகள் இரண்டையும் இழந்தார். திருவாரூர்ப் பெருமான் தன்னை மீளா அடிமையாக்கியதை நினைந்து உறுதி தளராது பெருமானை வேண்டினார். திருவாரூரை அடைந்து அப்பெருமானைக் காணக் கண்ணொன்று காணாதே என்று உள்ளம் வெம்பினார். 'அடியேனைத் துயர்க் கடலினின்றும் எடுத்தருள வேண்டும்' என வேண்டினார்.

“மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி
ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளா அங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே”



உமக்கே என்றும் பிரியாத அடிமை ஆளாகி, உம்மையன்றி வேறு எவரையும் எஜமானாக விரும்பாமல், ஆட்பட்டிருக்கும் அடியவர்கள், [வெளியில் கிளம்பாது உள்ளேயே குமுறுகின்ற தீயைப்போல, மனத்துக்கு உள்ளேயே துன்பமாகிய தீ ஜொலித்து, மிகவும் முகவாட்டமடைந்து தங்கள் துன்பத்தை உம்மிடம் முறையிட்டுச் சொன்னால் அதனைச் செவியேற்றுத் தீர்த்தருளாமல் சும்மா இருக்கின்றீர்! திருவாரூர்ப் பெருமானே! உமக்கு இது தகுமாயின் நீரே வாழ்ந்துபோம். நான் கெட்டால் கெடுகிறேன்.

இதுவரை மற்றொரு கண்பார்வையைப் பெறாத சுந்தரர், வருத்த மிகுதியாலும், தோழமை முறையாலும் உரிமையுடன் திருவாரூர்ப் பெருமானை வேண்டித் தம் வருத்த மிகுதியைப் புலப்படுத்திப் பாடுகிறார். மீளா அடிமை—உம்மைவிட்டு விலக்க முடியாத அடிமை. உயிர்கள் யாவும் கட்டுப்பட்ட நிலையிலும் முக்தி நிலையிலும் இறைவனுக்கு அடிமைகளே.

லௌகீக மனிதன் லௌகீகப் பொருட்களுக்கோ புலன்களுக்கோ மீளா அடிமையாகிறான். ஆத்மீக வாழ்வுள்ள மனிதன் ஆண்டவனுக்கே மீளா அடிமையாகிறான்.

'உமக்கு நான் மீளா அடிமையான பின்னும் என்னை நீர் காவாதொழிவீரேல் வாழ்ந்து போதீர் என்கிறார் சுந்தரர் நானும் நீயும் ஒன்று எனவே நான் கெடும்போது நீயும் கெடத்தானே வேண்டும். நான் கெட்டு நீ வாழ முடியாது. என்னைத் தோழமை கொண்டாயே. நான் கண்ணிழந்து வருந்த நீ மூன்று கண்களோடு மகிழ்ந்திருக்கிறாயே. இதுதானா தோழமையின் இலட்சணம். இவ்விடத்தில் அருணகிரியார் வாக்கை நினைக.

“பாழ் வாழ்வெனுமிப் படுமாயையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ் வானவை செய்தவை தாமுளவோ
வாழ் வாயினிநீ மயில் வாகனனே.”

—அருணகிரியாரும் ஆற்றாமையினால் 'வாழ்வாயினிநீ' என்று கூறினார். சுந்தரர் அடுத்த பாடலில்,

"விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்ததில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என் கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண் தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதீரே"

—என்கிறார். நான் உம்மிடத்து ஒருவரால் அடகு வைக்கப்பட்டவனல்லேன். மனம் ஒப்பி அடிமைப்பட்டேன். ஆதலால், நீர் வேண்டும்போது என்னை விற்றுக்கொள்வதற்கு உரிமை உடையீர். என் மனமறிய ஒரு குற்றமும் செய்தேனில்லை. இரக்கமின்றிக் குருடாக்கிவிட்டீர். என் சுவாமியே என் கண்ணை எதற்காக அபகரித்தீர். நீரே பழிக்கு உட்பட்டீர் எனக்கொன்றுமில்லை. நீரே வாழ்ந்துபோம்.

நாம் உலகினின்றும் மீள உலக நாயகனிடம் மீளா அடிமைகளாக வேண்டும். இதுவே மகான்களின் வாழ்க்கை காட்டும் மார்க்கமாகும்.

## — வள்ளியும் முருகனும் —

வான்முட்டு மலைக்கனிநீ யதனுல் வள்ளி
மலைக்கனியை அடைவதற்கே நாடிச்சென்ருய்!
மாதவட்கு மயலளிப்பச் சேட்டியானுய்!
மற்றதுதான் உங்கள்குல தருமம்! வள்ளி

மான்குட்டி ஆதலினுல் வேங்கை யாகி
மற்றவளை அகலாது மருங்கேநின்ருய்!
வள்ளிகிழவோ னென்றே காட்டுதற்கு
வள்ளியிடங் கிழவனுய் லீலைசெய்தாய்!

யான்கோட்கு மறுநீங்கிப் பத்தி செய்வோர்க்
கேவல் செய்யும் பணியாளன் ஈசன் என்றும்
இன்பநிலை காட்டுதற்கே வள்ளிபாதம்
இறைஞ்சினைநீ! அதனுண்மை இன்றுணர்ந்தேன்

தேன்சொட்டு கடம்பணியுஞ் சேயே! உன்றன்
திருவிளையாட்டின் பெருமை செப்பற்பாற்ருே!
சிந்திப்போர் நெஞ்சகத்தில் ஊறுந்தேனே!
திருத் தணிகை மலைவாழுந் தேவதேவே!

—வ. சு. செங்கல்வராய பிள்ளை



## — பொன்மொழி —

[ கோ. வை. சின்ன ஆறுமுக பக்தர் ]

1 அன்புநிறைந்த அருளுடைய அண்ணல் நம்மனோர் நன்னெறி கண்டுய்யுமாறு கொண்ட திருக்கோலங்களுள் நடராஜமூர்த்தமும் ஒன்ரும். இம்மூர்த்தி பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலிய மகாத்மாக்கள் பரமானந்தமயமாக விளங்கும் பூலோக கைலாய மென்னும் சிதம்பரமாயதில்லையின் கண் ஆனந்தநடனஞ் செய்தருளுகின்ற தாதலின் அம்மூர்த்தியினது பாத சேவையே நாம் பரமானந்த மடைதற்குத்தக்க சாதனமாகும்.

2 அந்தக் கரண வியாபாரமுடைய் ஒவ்வொரு மனிதனும் துன்ப நீக்கத்தினையும் இன்பப்பேற்றினையும் அடைய வேண்டின் தில்லை நடராஜ மூர்த்தியினது திருவடிகளைத் தஞ்சமாயடைந்து அன்பு மிக்குச் சேவித்தலே முக்கிய கடமையாம்.

3 இந்த உலகினில் பெருந்துன்பமுற்ற ஒருவன் தன் துன்பத்தினை ஒழித்து சுகத்தினை அடைய பெருங்கருணையுடைய செல்வனை ஆதாரமாக அடைந்து அவனது திருவடியில் விழுந்து வணங்குவது போல பிறப்பென்னும் பெருந்துன்பமுடைய நாம் அத்துன்பத்தினை யொழித்து முத்தியென்னும் இன்பத்தினையடைய சிதம்பரம் நடராஜ மூர்த்தியைத் தஞ்சமாக அடைந்து அம்மூர்த்தியின் பொற்பாத கமலங்களில் விழுந்து வணங்குதலே இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியான துணையாம்.

4 சிவனடிபாத தரிசனம் சிவானந்தமாகும் என்று ஆன்ருேர் கூறுவதுபோல தில்லைநடராஜன் திருவடிதரிசனம் பரமானந்தம் பெறுதற்குத் தக்க சாதனமாயிருப்பதுபற்றி யன்ருே

" கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவ
னற்ருள் தொழாஅ ரெனின்" என்றும்

" மலர் மிசையேகினுன் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்" என்றும்

நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர் கூறிப்போந்தனர்.

5 நலமெலாந்தரும் நடராஜன் சிதாகாய பரவடிவத்தில் நின்று ஆநந்த நர்த்தனம் செய்வதை நாமும் சமாதி நிலையில் கண்குளிரக்கண்டு தன்னையறிந்தின்ப முற்ருேமானுல் சச்சிதானந்தக்கடலில் மூழ்கி கரையடைந்து காட்சியெலாங்கண்டு திருவமுதுண்டு உடல் குளிர்ந்து அறிந்து தெளிந்து அறிவுருவாயழியாமை அடையலாமென்பதை அன்பனே கண்டுதெளிக.

# தூயசிந்தனைக் களஞ்சியம்

[ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதியவர்கள் நூலிலிருந்து திரட்டப்பெற்றது.]

61 பின்பற்றுவது சுலபம், வழிகாட்டுவது கஷ்டம்.

62 நற்குணங்களாகிய பூக்களாற் பகவானை பூஜை செய்.

63 மன அமைதியே மனிதனது விலையுயர்ந்த உடைமை.

64 கடவுளை உன்னுள்ளே தேடு.

65 நல்ல எண்ணங்களே ஒவ்வொரு மனத்தின் ஜபமாலையாக இருக்கட்டும்.

66 பிறர்க்கு ஊழியம் செய்வதற்கே உன் வாழ்வைத்தாங்கு.

67 கடவுளைப் புகழ்வதாகிய ஒரு காரியத்திற்கே உனது சொல் வன்மையை உபயோகி.

68 வார்த்தைகள் மிகுந்த பலம் பொருந்தியவை. அவற்றை ஜாக்கிரதையாக உபயோகி.

69 அந்தராத்மாவின் குரலுக்குத்தக மனமாகிய ஒலி பரப்பியைப் பொருத்து.

70 சிறந்த சங்கீதத்தைப் பெற வாழ்வாகிய நரம்பை ஒழுங்காக முறுக்கு.

71 வீணே உண்டு திரியும் அறிவற்ற வாழ்விலும் சாவே மேலானது,

72 கத்தி முனையில் நடப்பதுபோல் ஆத்மீக வழியில் செல்வது அவ்வளவு கடினம்.

73 இந்திரிய இன்பங்கள் அனுபவிக்க அனுபவிக்க நெருப்பில் நெய் ஊற்ற ஊற்ற அது அதிகரிப்பது போல் ஆவலை அதிகப்படுத்தும்.

74 தெய்வ முன்னிலையில் பிழை செய்தோருக்கு தங்கள் பாவத்தைநீக்கிக் கொள்ள பச்சாத்தாபம் என்னும் ஒரு ஆறு இருக்கிறது.

75 நம்பிக்கையை இழந்தோர் யாவையும் இழப்பர் என்று அறி.



# பெரும்பித்தன்

"முத்து"

பித்தன் என்ற சொல்லைப்பார்த்த உடனே தெருவிலே தன்பாட்டுக்குப் பேசிக்கொண்டோ, சிரித்துக்கொண்டோ ஆடிக்கொண்டோ செல்லுகின்ற ஓர் உருவம் முன்வந்து நிற்கிறது. உண்மையில் அவன் பித்தனா? அன்றி நாங்கள் பித்தரா? அவனுக்கு ஒன்றிலே தான் பித்து. அதுவும் அந்தப்பெரும் பித்தன் மேலேயே வெறும்பித்து. எங்களுக்கு எத்தனைமேலே பித்து மண்பித்து, பெண்பித்து, பொன்பித்து, புகழ்ப்பித்து, பிள்ளைப்பித்து, அதிகாரப்பித்து, தொழிற்பித்து, கல்விப்பித்து இப்படிக்கணக்கில்லை எங்கள் பித்து.

அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் நாம், எதையறிய வேண்டுமோ அதை அறிந்த மகானைப்பித்தன் என்கிறோம். அவர் என் செய்கிறார்? எங்களைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கிறார் இன்னுமா உங்களுக்குமெய்யறிவு வரவில்லை என்ற ஏக்கங் கொண்டு தம்கருணைக் கண்களால் எம்மைப்பார்க்கிறார். அதை நாம் 'அடே பைத்தியம் பார்க்குதடா' என்கிறோம். எந்தப்பித்தனுடைய காட்சி உள்ளத்தை விட்டகலாக் காட்சியாக அந்தப் பைத்தியத்திற்குத் தென்படுகிறதோ அதே காட்சியில் தான் நம்மையும் காண்கிறார்.

அந்தத் தெருப்பைத்தியத்தை உலகோர் நகைக்கலாம் எதுவும் செய்யலாம். ஆனால் அந்தப்பைத்தியம் இந்த உலகத்திற்குள் அடங்குவதில்லை. கட்டுப் படுவதில்லை சுதந்திர புருஷனாக விளங்குகிறான். ஆட்டம், சிரிப்பு எல்லாம்சர்வஞ்ஞத்துவ சுதந்தரத்தை விளக்குகிறது.

தில்லையிலே ஒரு பைத்தியம் எந்தநேரமும் ஆட்டந்தானாம். எந்த நேரமும் சிரிப்புத்தானாம். இந்தத் தெருப்பைத்தியத்திற்கு அது குறைந்த பைத்தியமல்ல. "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்குமுண்சிரிப்பும்பனித்தசடையும்பவளம்போல்மேனியில் பால்வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங்

கொண்டு ஆடும்" பைத்தியம். இந்த ஆட்டத்தைக்கண்டு மயங்கி விழித்தகண் இமைக்காது திறந்தவாய் மூடாது அங்காந்து பார்த்திருக்கும்பைத்தியங்கள் கோடிக்கணக்காகும்.

நம்பியாரூரர் திருமணக் கோலத்தோடு புத்தூர் சடங்கவியார் இல்லிலே திருமணப் பந்தரில் வீற்றிருக்கிறார். அந்தநேரத்தில் எங்கிருந்தோ பழுத்தகிழவர் ஒருவர் தோன்றினார். எனக்கும் உனக்கும் வழக்கு ஒன்று உண்டு. நீ எனக்கு அடிமை என்றார் கிழவர். நம்பியாரூரர் பைத்தியம் என்றார். அந்தப் பைத்தியம் சிரித்தது. ஆனால் முகத்தில் வெட்கமோ துக்கமோ கிடையாது. நம்பியாரூரர் கிழவருடன் வெண்ணெய் நல்லூருக்கு வழக்காடச் சென்றார். நம்பியாரூரர் வழக்கில் தோற்றார். கிழவருடன் கூடிச்சென்றார். சென்ற கிழவர் கோயிலுள் மறைந்துவிட்டார். கிழவரைக் காணாமையால் கோயிலினுள்ளே ஆரூரர் தேடினார். சிவபெருமானின் காட்சி கிடைத்தது.

"நீ முன்பே நமக்குத் தொண்டன். காதல் வழிப்பட்டு நம் கட்டளைப்படி நிலவுலகிற் பிறந்தனை. நின்னைத்துன்பவாழ்வு தொடராவண்ணம் பிரிவின்றித் தொடர்ந்து வந்து நான் மறையாளர்முன் தடுத்தாட்கொண்டோம்." அன்பரை அருளுடன் இறைவனார் நோக்கி நீ நம்மைப்பித்தன் என்று மொழிந்தனை ஆகையால் எம்மைப்பித்தனென்றே பாடுக என்றருளினார்.

ஊரும் பேருமில்லாத ஒருவருக்கு எப்பெயரிட்டாலுமென்ன? தமிழுலகம் சைவத்தால் தழைக்கத்தொடங்கியது. வன்றொண்டர் சிவபெருமானார் பேரருளை எண்ணி யெண்ணி அன்புவடிவாகி நின்றார். நாமெல்லாம் வாழும் வண்ணம்,

" பித்தா பிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை [துறையுள்
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேன்என லாமே"

என்னுந் திருப்பதிகத்தைப்பாடி வணங்கினார்.

அடியார்களுக்கு அருள்புரியும் வகையில் பெருங்கருணையால் பித்தர் போன்றவனே, திருவடிகளைத் தஞ்சம் என்று அடைந்த பிறைச்சந்திரனை உன் இயல்பாகிய கருணையினாலே முடியில்சூடிக்



கொண்டவனே அன்பர்களுக்கு எளியவனாயினும் எல்லா உயிர்களுக்குந் தலைவனே, அருளையே செல்வமாக உடையவனே, இனி உன்னை நான் எவ்வகையிலும் மறவாமல் இடைவிடாது தியானிப்பேன். அவ்வாறு நினைக்கின்ற என்மனத்திலே எழுந்தருளியுள்ளாய். பெண்ணையாற்றின் தென்கரையிலுள்ளதாகிய திருவெண்ணெய்நல்லூரிலே திருவருட்டுறை என்னும் ஆலயத்தில் அமர்ந்தருளிய என் அப்பனே! இனிநான் உனக்கு என்றென்றும் அடிமை என்று தெளிந்தபிறகும் அல்லேன் என்று கூடுதல் கூடுமோ?

எம்பெருமானாகிய பித்தர் அடியார்கள் மீதுள்ள அளவு கடந்த பெருங்காதலினால் பித்தனைப்போன்றவர். அடியார்களுடைய அற்பமான உடல் பொருள்களுக்குப் பதிலாக ஒப்புயர்வற்ற தம்மையே அளிப்பதனாலும் பித்தனைப்போன்றவர்.

நாம் தெருவில்கண்ட பித்தர் நடுத்தெருவில் சுதந்தரனாக ஆடினார். இறைவராகிய பித்தரோ சுடலையில் சுதந்தரராக ஆடுகிறார். நடுத்தெருவில் நின்றவரே பைத்தியமாகக் காணப்பட்டார் எம் கண்களுக்கு. சுடலையில் நிற்பவர் அதுவும் இடைவிடாது ஆடிக்கொண்டிருப்பவர் என்றால் பெரும்பித்தர் அல்லவா? சுந்தரர் அவரைப்பித்தன் என்றதில் என்ன பிழை? இன்னுங்குறைத்தே சொல்லிவிட்டார். பெரும்பித்தன் என்றாலும் மிகத்தகும்.

இதை வாசிக்கும் நீங்கள் மாத்திரம் பித்தராகிவிடாதீர்கள். அப்படி நீங்கள் பித்தராகிவிடுவீர்களானால் அது நீங்கள் செய்த பாக்கியமே. இனிமேல் உங்களைப் பித்தர் என்றால் கோபிக்கமாட்டீர்களே.

சுபம்.

கந்தரலங்காரம்

அடலருணைத் திருக்கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்று கண்டுகொண்டேன் வருவார் தலையிற்
றடபடெனப் படுகுட்டுடன் சர்க்கரை மோக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

— அருணகிரிநாதர்.

# சுந்தரர் மணிமொழிகள்.

1 தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உன்தொழிலே.

2 ஓடு புனற் கரையாம் இளமை. உறங்கிவிழித்தால் ஒக்கும் இப்பிறவி.

3 ஒருநெல் வால் ஊன்றவருந்தும் உடம்பிதனை மிகஉழாதழகா அலந்தேன்.

4 மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி இதுதான் அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய்.

5 ஆக்கும் அழிவும் ஐய நீ என்பன் நான், சொல்லுவார் சொற்பொருளவை நீ என்பன் நான், நாக்குஞ் செவியுங் கண்ணும் நீ என்பன் நான்.

6 செத்தபோதில் ஆருமில்லை. சிந்தையுள் வைமின்கள்.

7 தோற்றம் உண்டேல் மரணம் உண்டு, துயரம் மனை வாழ்க்கை மாற்றம் உண்டேல் வஞ்சமுண்டு.

8 இறைகளோடிசைந்த இன்பம், இன்பத்தோடிசைந்த வாழ்வு.

9 சொல்லிடில் எல்லை இல்லை, சுவையிலாப்பேதை வாழ்வு.

10 மணம் என மகிழ்வர், முன்னே மக்கள் தாய் தந்தை சுற்றம் பிணம் எனச்சுடுவர், பேர்த்தே பிறவியை வேண்டேன்

11 பொய்த்தன்மைத்தாய மாயப்போர்வையை மெய்யென்றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு வேண்டி நான் விரும்பகில்லேன்.

12 எண்ணி இருந்தும் கிடந்தும் நடந்தும் அண்ணல் எனநினைவார் வினைதீர்ப்பார்.

13 ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன் அடியவர்க்கடியனும் ஆனேன்.

14 அஞ்சாதே உமக்காட்செயவல்லேன் யாதினுக் காசைப்படுகேன்.

15 காலையிலும் மாலையிலும் கடவுள் அடிபணிந்துசிந்த மனத்தவர் பயிலுங்கலய நல்லூர்.



16 பேருமோர் ஆயிரம் பேருடையார் பெண்ணோடாணுமல்லர்.

17 வாடுமிவ்வாழ்க்கை தன்னை வருந்தாமல் திருந்தச்சென்று பாடுமின் பத்தருள்ளீர் பழமண்ணிப் படிக்கரையே.

18 பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே மெய்யேநின்றெரியும் விளக்கே ஒத்த தேவர்பிரான்

19 பொய்யவன் நாயடியேன் புகவே நெறி ஒன்றறியேன் செய்யவனாகி வந்திங்கிடர் ஆனவை தீர்த்தவனே.

20 பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்.

21 பண்ணிடைத்தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய் கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட்சுடர் ஒப்பாய்,

22 நீற்றாரும் மேனியராய் நினைவார் தம் உள்ளத்தே நிறைந்து தோன்றும்.

23 எந்தைபுகலூர் பாடுமின் புலவீர்காள். இம்மையேதரும் சோறுங்கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம். அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே.

24 காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலைகளை வாய்கறைக் கண்டா.

25 பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்.

26 மற்றுப்பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம்பாவித்தேன் பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந்தெய்தினேன்,

27 தூண்டாவிளக்கின் நற்சோதீ தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்

28 வழுக்கிவீழினுந் திருப்பெயரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம்.

29 தடங்கையால் மலர் தூய்த்தொழு வாரைத்தன் அடிக்கே செல்லுமாறு வல்லானை.

30 மெய்யனை மெய்யின் நின்றுணர்வானை மெய்யிலாதவர் தங்களுக்கெல்லாம் பொய்யனைப் புரமூன்றெரித்தானை.

# உயரிய வாழ்வுக்கான உண்மைத் தத்துவங்கள்.

(ஸ்ரீ மதிசுந்தரம்மாள்)
ராகவாச்சாரி

இப்பூவுலகில் நல்வாழ்க்கைக்கேற்ற உண்மைத்தத்துவங்கள் மூன்றுகும். ஒப்புயர்வற்றது, விலக்கில்லாதது, அழியாத தன்மையுடையது. ஒப்புயர் வற்றது: குறித்த நபருக்கே உரித்தான தனிப்பட்ட மாண்பு முகக்குறிகள், அங்கமச்ச அடையாளங்கள் இவைகளையடக்கியுள்ள தத்துவம். ஒரே தாய்வயிற்றில் பிறந்த இரட்டைக்குழந்தைகளிலும் கூட மேற்கூறிய அமிசங்களில் வேறு பாடுகள் காணப்படுகின்றன. விலக்கில்லாதது: மனிதவர்க்கத்திலுள்ள அனைவருக்கும் பொதுவாக அமையப்பெற்ற அமிசங்கள் இதனுள் அடங்கும்:- பேசும்பாஷை, பழக்க ஒழுக்கங்கள், சதாசாரம், தர்மநெறி, விலக்கற்ற பொது ஆசார நியமங்களின் உதவியின்றி ஒப்புயர்வற்ற நபர்கள் ஒருவரோடொருவர் உரையாடவோ, குறிப்பறிந்து ஒழுகவோ முடியாது. ஒப்பற்றதும் விலக்கில்லாததும் ஆகிய இரண்டும் சேர்ந்து (சாசுவதமான) அழியாத்தன்மை பெற்ற மூலப்பிரகிருதியான பரம்பொருளை அடைந்து ஒன்றுபட்டு ஐக்கியமாகின்றன. கண்ணபிரான் அருளித்தந்துள்ள பகவத்கீதைக்குள் இத்தத்துவங்கள் மூன்றுமே சுடர்விட்டு ஒளிருகின்றன.

அருச்சுனன் போர்முகத்தில் வந்து நின்றவுடன் அடைந்த மனச்சோர்வுநிலையும் அந்நிலையில் அவன் உள்ளத்தில் உதித்துத் தாக்கிய எண்ணங்களுமே கிருஷ்ண பகவானை கீதை உபதேசஞ் செய்யும்படி தூண்டிய காரணங்கள். அருச்சுனனுக்கு எடுத்துரைத்த கரும நியாயங்கள் எல்லாம் நம்மெல்லோருக்குமே தினசரி வாழ்க்கையில் உண்டாகும் தருமசங்கட நிலைகளில் கலங்கரைவிளக்கம் போன்று நல்வழி காட்டிப்பயனளிப்பவை. நமக்கும் அருச்சுனனுக்கும் உள்ள வேறுபாடுகள் என்னவெனில்:- அருச்சுனனுக்குக் கிடைத்த விசுவரூபதரிசனம் நமக்குக்கிட்டுவதில்லை, பீஷ்மர், துரோணர், முதலியோரைக்கொல்லும்படி நம்மையாரும் வற்புறுத்தவில்லை. ஆகவே ஒப்புயர்வற்ற அமிசங்களில் பங்கெடுத்துக்கொண்டு அதனுள் நன்மைபெற நமக்குக் கொடுத்து வைக்கவில்லை. நமது உள்ளமாகிய "தருமக்ஷேத்திர"த்தில் நின்றபடி, நமக்குண்டாகும் வியாகுலங்களை நமது இருதயமாகிய இரதத்தில் வீற்றிருக்கும் தேரோட்டி (கிருஷ்ண) பகவானை நாடி அவரையே துணையாகக்கொண்டு விரட்டியடிக்கவேண்டும். 'கதோபநிஷத்'தில் மனிதர் நடந்துகொள்ளவேண்டிய முறைகளை எடுத்துக்கூறுமிடத்து பகவான் "உனது தேகத்தை இரதமாகவும்: அதனுள்ளிருக்கும் ஆத்மாவை இரதத்தில் வீற்றிருக்கும் மனிதனைகவும் உனது ஐம்புலன்களையும் ஐந்து பரிகளாகவும், உன் உள்ளத்தில் அவ்வப்பொழுது உதித்தெழும் உணர்ச்சிகளையும், மனநிலைகளையும் கடிவாளங்களாகவும், உன் இருதயத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவை, தேர்ப்பாகனைகவும் மதித்து நட" என்கிருர். ஆயினும் பார்த்தனுக்கு சாரத்தியம் செய்த பரம தயாநிதியோர் புனையில் அருச்சுனனுக்குச்செய்த உபதேசமொழிகளைக் கட்டாயமாகக் கடைப்பிடித்து நடந்தேதீரவேணுமென்றுகூட வற்புறுத்தவில்லை. நமது தினசரி வாழ்வில் நாம் ஈடுபடும் அலுவல்கள் பலவகைப்பட்டவை. அவைகட்கிடையே, நம்இருதய கமலத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவை நாம் மறந்தே போகிறோம்.

முற்பக்கத் தொடர்ச்சி

31 சாதலும் பிறத்தலுந்தவிர்த்தெனை வகுத்ததன் அருள்
தந்த எம் தலைவனே.

32 பொள்ளல் இவ்வுடலைப்பொருளென்று பொருளுஞ்சுற்றமும் போகமும் ஆகி மெள்ளநின்றவர் செய்வன எல்லாம்
வாராமேதவிர்க்கும் விதியானே.

33 சிந்தித் தென்றும் நினைந்தெழுவார்கள் சிந்தையில் திகழுஞ்
சிவன் றன்னை.

34 ஒன்றலா உயிர்வாழ்க்கையை நினைந்திட்டுடேல் தளர்ந்தருமாநிதியியற்றி, என்றும் வாழலாம் எமக்கெனப்பேசும்
இதுவும் பொய்யெனவே நினை உளமே.

35 வேந்தராய் உலகாண்டறம் புரிந்து வீற்றிருந்த இவ்வுடல்தான்
தன்னைத் தேய்ந்திறந்து வெந்துயர் உழந்திடும் இப்பொக்க
வாழ்வினை விட்டிடுநெஞ்சே.

36 திருவும் வண்மையும் திண்டிறல் அரசும் சிலந்தியார் செய்த
செய்பணிகண்டு மருவு கோச்செங்கணுன் றனக்களித்த
வார்த்தை கேட்டுநுன்மலரடி அடைந்தேன்.

முன்தொடர்ச்சி

# "சைவக்கிரியை விளக்கமும் ஆச்சிரம வொழுக்கமும்"

(ச. ப. சண்முகசுந்தரசர்மா, டிக்கோயா.)

ஆகவே, எங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் பிரதானமாகக் கவனித்துச் செய்யவேண்டியது சிவத்துவமடைதற்கு முதற்படியாக வுள்ள சமயதீட்சையாகும். சமயதீட்சை பெற்றபின் சற்குருவினிடத்து ஒப்படைத்து கல்விபயிலுவித்தல் வேண்டும். இங்ஙனமாகவே பிரமச்சாரியானவன் குருவின் கீழ்ப்படிந்து காயத்திரி (ஸ்ரீபஞ்சாக்கரம்) மந்திரவிளக்கம், சிவசின்னங்களின் விளக்கங்களையும் அவற்றைப்பேணி அநுஷ்டிக்கும் முறைகளையும் கற்றறிந்தபின்பு நித்தியம் நித்தியாங்கமாகிய கிரியைகளின் விளக்கங்களைக் கேட்டறிந்து அநுஷ்டித்து வருதல் வேண்டும். இதுவே

முன் பக்கத்தொடர்ச்சி

புத்திபூர்வகமாக அப்பரமனை நாடி. வேண்டினல் நமக்கு உண்டாகும் இடையூறுகளையும், மனக்கிலேசங்களையும், போக்கிச்சீர்ப்படுத்தி வைப்பார் என்னும் உண்மையை நாம் கவனத்திற்குக்கொண்டு வருவதில்லை. அல்லலில் பட்டு உழல்கிறோம். நம்மவரில் வைதிகச்சிரத்தையுள்ளவர்களில் பலருங்கூடபரமாத்வை தியானிக்கையில் அவருடன் தமது குறைகளைக்கூறி உரையாடுவதில் நேரத்தை வீணைக் கழிப்பார்களேயன்றி, பகவான் சொல்வதை செவி சாய்த்து உணர்ந்து அவரையே நம்முடன் உரையாடும்படி செய்யமுயல்வதில்லை. நமது மனச்சாக்ஷியின் துறையாக, நம்முடன் ஈசுவரன் உரையாட எப்போதும் இசைவர்; இது நிச்சயமான விஷயம். அனுபவசித்தர்கள் கண்ட உண்மை. நாமும் அவ்விதமே பகவானுடைய இன்பந்தரும் உரையாடலைக் கோரி அடைவது சாத்தியம். நாம் தான் அவருக்கு இடங்கொடாது. நாமே அவருடன் உரையாடிக்கொண்டேயிருக்கிறோம் இதுதவறு ஆத்மசிந்தனையுடன் ஈசனை வழிபட்டு வணங்கி அவரது அருளை அடையமுயலுங்கள்.

ஓம் சாந்தி.



சரியாபாதத் தொண்டெனப்படும். இதன் விபரமாவது முறையே சந்தியாவந்தனமாதியனவும், குருவழிபாடும், சிவாலயத்தொண்டு சிவனடியார் தொண்டு முதலானதுகளாம். இவற்றின் விபரங்கள் சைவக்கிரியாநூல்களிலே பின்வருமாறு கூறப்படுகின்றன.

1 "தண்ணறலின் மூழ்கியே தர்ப்பணஞ் செய்தே செபமும்
உண்ணினைவான் சங்கரன் றளும்" என்பதாம்.

அதாவது, குளிர்மையான நீரிலே ஸ்நானஞ்செய்து தர்ப்பணமும் காயத்திரி (ஸ்ரீ பஞ்சாக்கரம்) செபமும் செய்து இறைவனுடைய திருவடிகளையும் மனதிலே தியானித்து வணங்குவான் என்பதாம். இங்கே "வணங்குவான் என்பதனுல் வணங்கவேண்டும் என்பது வலியுறுத்தப்படும்." இதனுலே சந்தியாவந்தனமாதியன விளக்கமாகிறது. இனி

2 "புரிந்தே குரவனடியிணையும் போற்றிப்
பரிந்தேயலர் தூய்ப்பணிந்து." என்றும்

"ஏவுதன்முன் னேயியற்றிப் பணியறிந்து
நாவினவின் றவன்நாமம்." என்றும்

"சிந்தனை செய்க சிவனிவனே யென்றுளத்துட்
பந்தமறுப் பானைப்பரிந்து." என்றும் கூறப்பட்டுள்ளது.

அதாவது: பிரமச்சாரியானவன் தனக்குக் கல்விபுகட்டும் சற்குருவை நாடி "எழுத்தறிவித்தவன் இறைவனுகும்" என்பதற்கிையைய இறைவனுகவே பாவித்து அவரது திருப்பாதங்களிரண்டையும் நறுமலர்களைச் சாத்தி வணங்கியும், அவர் இன்னது செய்யென்று ஏவுதற்கு முன்பாகத்தானே குறிப்பாலறிந்து செய்தும் அவரது திருநாமத்தை நாவினுலுச்சரித்தும், தான் செய்து கொண்ட கன்மம் நீங்கத்தனக்கு நல்வழிகாட்டும் நல்லுபதேசஞ் செய்யத்திருவருள் கொண்டு எழுந்தருளிய சிவபிரானே இவரென மனதிற்றினைத்து வரும் பேரன்போடு வணங்கவேண்டும். என்பதாம். இதனுலே குருவழிபாடு கூறப்பட்டது. இனி.

3 சிவாலயத்தொண்டுகள். இவைமுறையே, சந்தியாவந்தனம் குரு பணிவிடைகள் முடிந்தபின் இறைவனதாலயங்கட்குச்சென்று சூரிய உதையமாவதற்கு முன்பு திருவலகிட்டு, திருமெழுக்கிட்டு அன்றலர்ந்த புஷ்பங்களைக் கொண்டு நல்ல மாலைகள் தொடுத்து இறைவருக்குச்சாத்தக் கொடுத்து பேரன்போடும் இறைவன்னு

மங்களைப் பாடித்துதித்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்து வணங்கித் திருவிளக்கேற்றி மகிழ்ந்து வழிபடுதலாம். இதில் நைட்டிகப் பிரமச்சாரியானவன், சிவாலயங்களின் நித்திய பூசை அபிஷேகாதிகளிலும், உற்சவம், துவசாரோகணம், பிராயச்சித்தம் முதலானவற்றிலும் கலந்துகொள்ள அருகதையுடையவனாவான். இதில் எல்லாவருணத்தாருக்கும் அவரவர் ஆசாரவனுஷ்டானமுறையோடு கூடிய கிரியாபாகங்களில் அருகதையுண்டு. அநுஷ்டிக்கவும் வேண்டும்,

4 சிவனடியார் தொண்டு

"சிவநேசர்பாதம் வணங்கிச் சிறக்க
வவரேவல் செய்க வறிந்து" என்றும்

"ஆராதகாத லறவன் னமருத்து லித்துப்
பேராதலின் னருளைப் பெற்று" என்றும்

"இன்றன் றேவாக்கையெடுத்த பலமடைந்தேன்
என்றுமிசைப்பான் சமயியே" என்றும் கூறப்பட்டுள்ளது.

அதாவது, சிவனடியார்களாகவுள்ளவர்கள் யாவராயினும் சந்நியாஸ வாச்சிரம வொழுக்கத்தை அநுட்டிப்பவர்களாய் மெய்நீறும் மிக்க சாதன வேடப் பொலிவுமுடையராய் சாந்த சீலர்களாக வருபவர்களைக் கண்டால், தாமதியாது சென்று அவர்கட்கெதிரில் விழுந்து பாதங்களை வணங்கி முற்குறிப்பாலுணர்ந்து அவர்கட்கு வேண்டிய ஏவல்களைச் செய்து அவர்களுக்கு வேண்டிய உணவு உடை முதலானவற்றைக் கொடுத்து சுத்த சித்தமுடன் அவர்களுக்கு அடிமைத்திறம்பூண்டு யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை நீக்கி (அகங்காரம்—தனுகரணங்கள்.) (மமகாரம்—புவன போகங்கள்) இன்றல்லவா, யான் பிறவியெடுத்ததன் பயனை அடைந்தேனென வுணர்ந்திருத்தல் வேண்டும்.)

(தொடரும்.)

> உங்கள் உள்ளம், உரை, செயல் இம்மூன்றிலும் தூயராயிருக்கப் பழகுங்கள்- காலம் தவறாது உங்கள் சாதனைகளைப் பழகுங்கள். காமம், கோபம் இவைகளுக்குச் சிறிதேனும் உள்ளத்தில் இடம் கொடுக்கவேண்டாம். எப்போதும் மனம் அமைதியாக இருக்கவேண்டும். கவனமாயிரு, விழிப்பாயிரு தைரியமாய் முயல். ஆண்டவனிடம் நம்பிக்கைகொள். அவனருளும் மகான்கள் ஆசியும் தங்களுக்கு எப்போதும் கிடைக்கும் —ராமதாஸ்.



# நன்றிக்கடன்.

(சரஸன்.)

பிறருடைய உபசரிப்புக்களைப் பெற்றுக்கொள்பவர்கள், சிந்தித்துப் பார்க்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது, தாம் மற்றவரிடமிருந்து பெறும் உபசரிப்புக்குப் பிரதி செய்ய சந்தர்ப்பம்கிடைக்கும்படி செய்துகொள்ளவேண்டும். பிறருடைய உபசரிப்புக்களைப் பெறுவதோடு மட்டும் நின்று, நாம்நம்முடைய பிரதி உபசரிப்பை செய்யச் சந்தர்ப்பம் வாய்க்காது போய்விடின் நாம் நம்மை உபசரித்தவர்களுக்குக் கடன்பட்டவர்களாவோம்.

இதைவிளக்கும் கட்டம் ஸ்ரீமத் இராமாயணத்தில் அமைந்துள்ளது, ஸ்ரீ இராமபிரான் வனவாசத்தை முன்னிட்டு, சீதாபிராட்டியுடனும், இலட்சுமணனுடனும், புறப்பட்டுச் செல்லும் வழியில் குகனைச் சந்திக்கும் கட்டம் நாம் அறிந்ததுதான்.

ஸ்ரீ இராமனை உபசரிக்கும்பேறு தனக்குக் கிட்டியதை எண்ணிப் புளகாங்கிதம் எய்திய குகன், அவருக்குப் பலவகைக் கனிவர்க்கங்களையும், இன்னுந் தபோதனர்கள் அருந்தக்கூடிய உணவு வகைகளையும் சமர்ப்பித்து, புசித்தருளும்படி வேண்டினன்.

ஸ்ரீ இராமன் பார்த்தார், தன் எதிரில் வைக்கப்பட்டுள்ள கனிவர்க்கங்களையும் இதரப் பொருட்களையும். குகனுக்குத் தன்பாலுள்ள பக்தியும் விசுவாசமும் கண்டு வியந்து மகிழ்ந்தார் எனினும், உணவுவகை எல்லாம் தொட்டுப்பார்த்ததோடு நின்றாரே தவிர, அவற்றைப் புசிக்கவில்லை.

ஐயனே! என்ன இது? இவற்றில் ஒன்றைக்கூடப் புசிக்கக் காணோமே! நான் என்னவகையில் அபசாரம் செய்தவன் ஆனேன் எனக்கேட்டு வாடினன் பக்தன் குகன்.

இராமன் சொன்னார் "நண்பா! நீ அபசாரம் ஒன்றும் செய்யவில்லை, உண்மையுடன் கூடிய உபசாரந்தான் இது. ஆனால் என்னை உனக்கு கடன்காரனாய் ஆகிவிடும்படி செய்யப்பார்க்கிறாய்,

# இனிமை

(பித்துக்குளி)

உலகத்தில் இன்பத்தைக்கொடுக்கக்கூடிய சொற்களில் இனிமை' என்பதும் ஒன்று. இனிமைஎன்றசொல் கேட்டவுடன் ஓர் தனி உணர்ச்சி ஏற்படுகிறது. இந்திரியங்கள் எங்கே இனிமை என்று உணர்வதற்காக விரைகின்றன. காது கானமா? நாக்கு ரஸ பதார்த்தமா? கண் அழகான காட்சியா? நாசி சுகந்தமான வாசமா? தேகமும் மனமும் அழகும் இன்பமும் நிறைந்த பொருளா? என்ற கேள்விகளுடன் கட்டுக்கடங்காத தத்தம் போக்கில் பழக்க வழக்கங்களுக்குத் தக்கவாறு அனுபவிக்க கிளம்பி விடுகின்றன அனுபவத்திற்கு இடையூறு செய்யும் எதையும் வெறுக்க இவ்விந்திரியாதிகள் தயாராயுள்ளன.

---

**முன்பக்கத்தொடர்ச்சி**

இளையாய்! நீ படகோட்டிதான். எனினும் உண்மையில் படகோட்டியல்ல உன் உண்மை சொரூபம் நான் அறியாததல்ல. சாக்ஷாத் குகன் சண்முகன், முருகன், சுப்ரமண்யன் நீ! உனக்கு இம்மையிலும் மறுமையிலும் ஒருதேவையும் கிடையாதல்லவா? நீ அளிக்கும் உணவை நான் ஏற்றுக்கொண்டால் பிரதியாய் நான்உனக்கு ஏதாவது செய்யவேண்டும். உனக்கு ஏதாவது தேவை என்று இருந்தால் அல்லவா செய்வதற்கு? எனவே நீ அளிக்கும் போசனத்தை உட்கொண்டால், நான் உனக்குக்கடன் பட்டவன் ஆகமாட்டேனா? எப்படி அக்கடனை அடைப்பது?

நன்றியை ஏற்றுக்கொள்பவர்கள் அதிகம். கொல்பவர்களும் அதிகம். ஆனால் நன்றி செய்பவர்கள் குறைவு. அதுவும் பிரதி நன்றியைக் கருதாது செய்பவர்கள் இன்னுங்குறைவு. எல்லாவற்றிற்கும் மேலாய்ப் பிறரிடம் இருந்து பெறும் நன்றிக்குப் பிரதி நன்றிசெய்யச் சந்தர்ப்பம் இல்லையேல், அப்பேர்ப்பட்டவர்களின் நன்றியைப்பெறுவது கூடாது என்று கருதுகிறவர்கள்மிக்கதுர்லபமல்லவா? ஸ்ரீஇராமனைக் கடைசி இனத்தில் தான் சேர்க்க வேண்டும்.

---



உலகில் எது இனிமையானதென பின்பற்றப்படுகிறது தெரியுமா? அறிந்தோ, அறியாமலோ வீண்வார்த்தை, பரநிந்தனை, அமைதியைக்கெடுக்கும் காட்சி, நிறைவேறாத ஆராய்ச்சி, இந்திரியங்களின் திருப்தி ஆகியவைகளே யாம். இனிமை காண்கின்ற இடமெங்கும் நிறைந்துள்ளது. ஆனால் இனிமை போல் இருக்கும் துன்பமே அறிந்தவர் என்று சொல்லிக்கொள்பவர் முதல் அறிவற்ற நிலையுள்ளவர் வரை அனைவரும் அனுபவிக்கின்றனர். உண்மை இனிமை தான் எது?

இனிமை அனுபவிப்பவன் தன்னை அண்டினவர்க்கும் தன் பாதையைப்பின் பற்றுபவர்க்கும் அமைதியைத்தந்து தானும் ஆநந்தனாக இருக்கவேண்டும், முன் சொன்ன அழிவையும் இழிவையும் தரவல்லவற்றில் இனிமை காண்பதால் தான் காமாதிகள் வேற்றுமைகள், பொறாமைகள், துக்கங்கள், ஏமாற்றம் முதலியவை ஏற்படுகின்றன. உண்மையில் அமைதிதரும் இனிமை தான் எது?

மனிதனுடைய வாழ்க்கையை இன்பதுன்பங்களாகிற சுழலில் சிக்கவிடுவதின் முக்கிய இந்திரியங்களில் இரண்டு: ஒன்று நாவு, மற்றொன்று கண். இது கொண்டுதான் "நாவையும் கண்ணையும் நலத்திலே நாட்டு" என்று சொல்லியுள்ளார்கள். மனிதனுடைய நாவானது இனிமையென எண்ணி பல ஆரோக்கியமற்ற உணவுகளை உண்டு உணவின் மூலம் குணங்கள் மாறுபட்டுகோபம் பொறாமை வளர்க்கப்பட்டு இன்னது சொல்வது என்பதின்றி பல வார்த்தைகளைக் கொட்டி தனக்கும் சார்ந்தவருக்கும் துக்கத்தை ஏற்படுத்துகிறது, இது கொண்டு நாவுக்கு இனிமையென்னும் பாதையை

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சோல்லிழுக்கப்பட்டு."

என்று வள்ளுவர் பெருமான் வற்புறுத்துகிறார். வீண் வார்த்தைகள் நாவினின்று வெளிக்கிளம்பாமலிருக்கநல்ல இனிமையானஉணவை அதற்குக் கொடுக்க வேண்டும், எது இனிமையான உணவு?

கரும்பும், சர்க்கரையும் தேனும் கலந்த பதார்த்தங்கள் இனிமையானவையென்று நாக்கரசனின் அன்பர்கள் சிலர் கருது

கிறார்கள். சிலர் காரமாக இருந்தாலும் நிறைய மிளகாய், புளி மற்றும் சரக்குகள் அரைத்து விட்டு மேலான காய்களை நறுக்கிப் போட்டு சாம்பார், கூட்டு, அவியல் முதலியவைகளுடன்கூடியவிருந்துகள் தான் இனிமையென்று சப்புக்கொட்டிக்கொண்டு சொல்வார்கள். இது அவரவர் மனோபாவத்திற்குத் தக்கபடி சிறிதளவு சிறிது நேரத்திற்கு இனிமையைத் தரலாம். மிதமிஞ்சி இவ்வினிய ஆகாரங்களை நாவின் உத்தரவுப்படி உண்டுவிட்டால் தேகஆரோக்கியம் கெட்டு வைத்தியரின் மருந்துகளுக்கெல்லாம் வயிற்றையும் வீட்டில் சிலபாகங்களையும் ஒதுக்கி விடச்செய்கிறது. நாவு சொல்லும் இதுதானா இனிமை? அனுபவித்தவர் இல்லவே இல்லை என்று சொல்வார்கள்.

மேற்சொன்ன பல இனியவைகளை அனுபவித்த பழக்கத்தினால் நாவிற்கும் அது கிளம்பும் சொற்களுக்கும் அடிமையாகி வாழ்ந்து அதில் பலன் காணாது உண்மை இனிமையான ஆண்டவனின் புகழ்பாடி பூர்ண அமைதிபெற்ற ஆன்றோர்கள் வாழ்வில் தங்களுக்கு முதல் இடையூறாயிருக்கும் நாவிற்கு நல்மொழி சொல்லுகிறார்கள்.

“ இனிமை வேண்டும் நாவே
உனக்கினிமை வாழ்வு சொல்வேன்
கனிவு நிறை ஐயன்
திருக் கழலைப் பாடு, அன்பாய் ”

என்றும்,

“ வேண்ட வரங்கள் தருவான்—வடி
வேலனைப்பாடடா நாவே
தண்டத்திற்குன்னையே பாடி நல்ல
தமிழை வதை செய்யாதே
கொஞ்சும் குமரனைப்பாடு—அவன்
கோல மயிலினைப்பாடு
வஞ்ச உலகோரைப்பாடி—தமிழ்
வாசகத்தைக் கெடுக்காதே.”

என்றும். வேறு வார்த்தைகளையும் வம்புகளையும் பேசி, பேச ஆதாரமாயுள்ள இனிய தமிழையும் தன் வாழ்வையும் பிறர் வாழ்வையும் வீணாக்காது நாவை நலமான இனிமையை நாளும் அனுபவிக்க இனிமைக்கெல்லாம் இனிமை தரும் இறைவன் தாளைப் படாப் பழக்கவேண்டும்.

[ தொடரும் ]



# இறைவனருளும், மானிடர் கடமையும்

[ தென்னாப்பிரிக்கா டர்பன், திரு. ச. மு. பிள்ளை அவர்கள் ]

இந்த உலகத்தில் மானிடர்கள் அனைவரும் சுகவாழ்க்கையையே நாடி நிற்கின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையில் சுகம் அனுபவிக்கப் பாடுபடுகின்றனர். ஒவ்வொருவரும் தேடும் சுகத்தின் தன்மையும் பல்வகைப்பட்டது.

நாம் இவ்வுலகத்தில் பிறந்துள்ளோம். இது கண்கூடு. இந்த உலகத்தில் நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான காரியத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். இதுவும் நிதர்சனம்

இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஆலோசிக்க வேண்டிய பிரச்னை, இந்த உலகத்தில் மானிடர் ஒவ்வொருவரும் செய்யக்கூடிய கடமை என்ன என்பதுதான்.

முதலாளி ஒருவன் தன் வேலைக்காரனை கடைக்கு அனுப்புகிறான். வேலைக்காரன் கடைக்குச் சென்று யஜமானன் சொன்னதைத்தான் செய்யவேண்டும். அவன் மனோ ராஜ்யப்படி எதுவும் செய்யலாகாது. அதுபோலவே, நாமும் இந்த உலகத்தில் பகவானின் சங்கல்பத்தினால் பிறந்தவர்கள். ஆகவே, நம்மை சிருஷ்டித்த பகவானின் சங்கல்பத்தை பூர்த்தி செய்வதே நம் கடமையாகக் கருதவேண்டும்.

இந்த உலகத்தில் நாம் பிறந்தது பகவானின் சங்கல்பத்தினாலா என்னும் பிரச்னை எழக்கூடும். நம்முடைய சொந்த இச்சையினாலோ, அல்லது நம் உறவினர்களின் இஷ்டத்தினாலோ, அல்லது நம் பெற்றோர்களின் இச்சையினாலோ நாம் இந்த உலகத்தில் தோன்றியிருப்போமாகில் நம்முடைய உடலமைப்பும், சுற்றமைப்பும் மற்றுமுள்ள நிலைமைகளும் நம் இஷ்டப்படியோ அல்லது நம் பெற்றோர், உறவினர் இஷ்டப்படியோ அமைந்திருக்குமல்லவா?

உண்மையை நோக்குமிடத்தில், இந்த உலகத்தில் சிருஷ்டியாகியுள்ளவையனைத்தும் நம் இஷ்டப்படியும் சிருஷ்டியாகவில்லை என்பது நிதர்சனம். ஆகவே, நம்மையும், உலகத்தையும் சிருஷ்டித்தது பகவான். நம் உடலுக்குள்ளே ஜீவநாடி மூச்சை வைத்ததும் பகவான். அந்த மூச்சு அவனுடைய மூச்சு என்பது நிதர்சனம்.

இந்தக் காரணத்தைக் கருதி பகவானுடைய ஆக்ஞைப்படி நடப்பதுதான் மானிட தர்மமாகும்; சத்தியமாகும். ஆதி அந்தமில்லாத பரப்பிரம்மத்தின் ஆக்ஞா வழியைக் கடைப்

பிடித்து ஒழுகுவதுதான் நியாயமுமாகும். ஆனால்,பகவானுடைய ஆக்ஞை இன்னதென்பதை எப்படி தெரிந்து கொள்வது என்று கேட்கலாமல்லவா ?

இந்த உலக சிருஷ்டியும், இயற்கை சம்பவங்களும் பகவானுடைய ஆக்ஞையினால் நடக்கிறபடியால் இயற்கையைக் கூர்ந்து கவனித்து பகவானுடைய ஆக்ஞையை அறிந்துகொள்ளலாம். உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஆனந்தத்தை அனுபவிக்கத்தான் விரும்புகிறான். சந்தோஷமாக வாழவேண்டும் என்பதைத்தான் வாழ்க்கை லட்சியமாகக் கருதுகிறான். அதிலிருந்து பகவானுடைய இஷ்டமும் ஜனங்கள் சுகமாக வாழ வேண்டுமென்பதுதான் என்பதை அறிந்துகொள்ளலாம்.

ஆனால், தேடி நிற்கும் மானிடர் வஸ்துக்களை சேகரிக்கவும், சேகரித்த வஸ்துக்களைக் குவித்துத் தங்களிடமே வைத்திருக்கவும் ஆசைப்படுகிறார்கள். செல்வம், மனைவி, வீடு வாசல் குழந்தைகள், பூமி, வண்டிகள், குதிரைகள், மோட்டார் வாகனங்கள் முதலியவைகளை சேகரித்து வைத்துக்கொள்ளுகிறார்கள்? அவைகளை வைத்துக்கொள்வதன் மூலமாகத் தங்களுக்கு சுகம் ஏற்படும் என்னும் எண்ணத்தினாலேதான்.

ஆனால், அவர்கள் நினைத்தபடி ஆவதில்லை. எவ்வளவு சம்பாதித்தாலும் பயனில்லை என்பதை உணர்கின்றனர், செல்வத்தால் சுகம் ஏற்படுவதில்லை. அதன்பின் மனம் துக்கப்பட ஆரம்பிக்கிறது. விரும்பியது கிடைக்கவில்லையென்றால் துக்கந்தானே ?

மானிடர் விரும்பியது கிடைத்துவிட்டால் திருப்தி ஏற்படுகிறதில்லை. இன்னும் அதிகம் வேண்டுமென்னும் ஆசைதான் ஏற்படுகிறது. கிடைக்கக் கிடைக்க ஆசை அதிகமாகிறது. இதனால், மானிடர்கள் தெரிந்துகொள்ள வேண்டியதென்னவெனில், நாம் விரும்பும் லோகாயத வஸ்துக்கள் எதற்கும் மனிதனுடைய ஆசையைத் தணிக்கவல்ல குணமில்லை. நாம் பிரமையினால் அந்த வஸ்துக்களின்மீது ஆசைவைத்து மோசம் போகிறோம் என்பதுதான்.

லோகாயத வஸ்துக்களினால் மனதிற்கு சுகமும், சாந்தியும் ஏற்படவில்லை என்பதை தெரிந்துகொண்டவர்கள் உண்மையாக ஆனந்தமளிக்கவல்ல வஸ்துவை நாடுகின்றனர்.

அப்பேர்ப்பட்ட வஸ்து எது? ஆத்ம தரிசனமேயாகும். பகவானுடைய சக்தியிலிருந்து மானிடர் தோன்றியவர்களாகையால், அந்த சக்தியுடன் கலப்பதைக் குறித்து சிந்தித்து நாடுவதிலேதான் திருப்தியுண்டாகிறது.



# சுந்தரமூர்த்தி வணக்கம்

எத்தனையோ பிறவிதொறும் கசிந்துருகிக்
கரையேற்றென் றேங்கி நிற்கும்
சித்தர்களைப் பாசத்தில் தேங்கவிட்ட
பேரிறைவன், சினத் தீ பொங்கப்
பித்தாவென் றேசிய நின் மயக்கொழித்துத்
தடுத்தாளப் பெற்றாய் என்றால்,
அத்தா ! நின் பெருமை சொல யார்வல்லார் ?
எத்தவம் நீ ஆற்றினையோ ?

மறைகளெலாம், எல்லையற்ற காலமெனும்
பெருவாயால் வழுத்தி நின்றும்,
'இறைவனிவன்' என்றுணர்த் தொணாதபரம்
பொருள், உருப்பெற் றெளிதாய் வந்து
திருவடிநொந் திடநினது காதலிபால்
தூதுநடந் திட்ட தென்றால்,
பெருமான் ! நின் மகிமைதனை மனிதவுருப்
பெற்றவாற் பேசப் போமோ ?

முடிவற்ற தனிமுதல்வன் அடியிணைக்கே
தம்வாழ்வு முற்றும் ஈந்த
அடியார்கள் அறுபத்து மூவர்க்கும்
அவரடியார் அனைவருக்கும்
அடியேனென் றுளமுருகித் திருத்தொண்டத்
தொகை பாடியதை நினைத்தால்,
முடிவற்ற நினதடக்கம் முன்வந்து
நின்புகழை முழக்குதையா !

தையலர் நாயகி பரவை ... சங்கிலியாம்
பூங்கொடியைத் தழுவிப் பொன்றாத்
தெய்வீகக் காதல்தனைத் தமிழ்ப் பொழிலில்
வளர்த்துவிட்ட செல்வா ! பொல்லா

வையகமுய்ங் திடப்புனித சைவநெறி
தனையளித்த வள்ளலே! நின்
துய்யசர ணரவிந்தச் சுடர் பெற்றார்க்
கிடருண்டோ? சுந்த மூர்த்தி!

மந்திரம்போல் தொட்டவரை வசப்படுத்திப்
பேரின்ப வளத்தை யூட்ட,
விந்தைமிகு பக்தியெனும் மின்சாரந்
தனைப் பிரிக்கொ ணுவி தத்தில்
பைந்தமிழில் பாய்ச்சி, இன்பப் பண்பொழிந்தோய்!
காலையிளம் பரிதி நாணும்
சுந்தரனே! மெய்ஞ்ஞானச் சும்மதியே!
நின்கமலத் துணைத்தாள் போற்றி!

திருவாரூர்க் கற்பகமே! சிவம்பழுத்த
தவக்கனியே! தெவிட்டாத் தேனே!
இருள்மாயை கடந்தொளிரும் எழிலார் சுந்
தரமூர்த்தி எல்லை யில்லா
அருள் வெளிக்குள் இச்சையினல் அகிலாண்ட
கோடிகளை ஆட்டி வைக்கும்
பெருமானின் உயிர்த்தோழா! பேரின்ப
வடிவே! நின் பெருந்தாள் போற்றி!

—"பரம ஹம்ஸ தாஸன்"

---

## காத்தருள் புரிக!

(தி- ச. வாசுவேதன்.]

**இராகம்- பாகேஸ்ரீ:** **தாளம். ஆதி,**

எடுப்பு

ஞான வெள்ளமே வள்ளல் இராமலிங்கமே
நானு முன்னையே நம்பி நாளும் நினைந்தேன்—வடலூர் (ஞா)

தொடுப்பு

வானம ளாவிடும் வாய்மையின் குன்றே
வகையுடன் வாழும் வரமருள் ஒன்றே (ஞா)

முடிப்பு

தேனமு தம்போல் செந்தமிழில் விரிவாய்
திருவருட்பா வென்றே செய்தீர் பரிவாய்
கானமதைப் பருக கருணைபுரிவாய்
கைவிடில் எனக்குதான் கதியில்லைத்தெரிவாய் (ஞா)





## — அடியார்கள் மகிமை —

—[மௌன சாது]—

6 ஊமை போலிருக்க வுணர்வு முள்ளார்—அவர்
ஊண்பொருள் தேடு முணர்வுமில்லார்
ஊனவுடலொடுங்க இன்ப முள்ளார்—அவர்
ஊக்க வுணர்வு உருக்கமுள்ளார் (அ)

7 எத்திறஞ் சென்ருலு மித்திறம் நிற்பார்—அவர்
எங்களுக் கிணங்கிய வின்பமுள்ளார்
என்மன முள்ளார் என்நேர வருளார்—அவர்
எத்திசை யென்ருல் உச்சிதை யென்பார் (அ)

8 எட்டகத் திருப்பினுங் கூட்டகத் திருப்பார்—அவர்
ஏக நிறைவுள்ளா ரானந்த அன்பர்
ஏகஜோதி யுணர்வு தூய்மை பேறுவார்—அவர்
ஏங்கிப் பேசா வாசியுள்ளுவப்பார். (அ)

9 ஐந்தெழுத்தாலே யறிவு துலங்குவார்—அவர்
ஐக்கிய நிறைவு அலங்கார முள்ளார்
ஐம்புல னறிவாரரும் பொருள்பதிவார்—அவர்
ஐம்புலனழகு ஆனந்த மேன்பார் (அ)

10 ஒற்றுமை யன்பு உறுதியுள்ளார்—அவர்
ஒன்ருயுணரு முருக்க முள்ளார்
ஒழுக்க நிலையது கருமமுள்ளார்—அவர்
ஒருதிசை மருவியுருகு மேன்பார். (அ)

11 ஓதுதற்கிணங்க ஒழுக்கமுள்ளார்—அவர்
ஓமெனுமுண்மைக்குருக்கமுள்ளார்
ஓங்காரப் பொற்குகையி லோவிய மறிவார்—அவர்
ஓலோல மணியோசை யுண்மை அறிவார். (அ)

12 அவ்வருளாலே யகர மறிவார்—அவர்
அவ்வழி வறியும் அறிவு மறிவார்
அரிய பிறவி யிதேன்றறிவாலறிவார்—அவர்
அரியவரடியாரருமை களறிவார் (அ)

## — சரஸ்வதி தோத்திரம் —

( பவானி )

கலைமகள் தேவி கலைவாணிநீயே
கருணை புரிவாய் காத்தருள் புரிவாய்
கமலவாசனி கருணாகரியே
கவியினுக்கரசி நாவினுறைவாய்
நாமகள் வாணி நான்முகன் தேவி
பூமகள் தங்காய் புவியினுக்கரசி
மங்கையர்க் கரசி மதிமுகத் தேவி
பொங்கு கலைவாணி புனிதவாகினி
மங்கும் இருள் தனை மாண்டிட அருள்வாய்
செங்கைக் குவளைச் சிலம்பொலியாக்க
எங்கும் நிறைந்தாய் இதயத்துள் வதிவாய்
அன்னை பராசக்தியின் அருட்சோதி வடிவி
அபயமளிப்பாய் அடியேன் தனக்கு
அம்பிகை தேவி அரன் முகன் தேவி
செம்பொற் சிலம்பி சிவசக்தி தேவி
பைம் பொன் மேனி பண்ணினுக் கரசி
இயலிசை நாடகமெனுமூன் றளித்து
மயல்தனைப் போக்கி மணிபெறச் செய்வாய்
பையவே வந்து செய்ய சீர்க்கலையை
இயைபுடனேயே எங்களுக்கருளி
மையல் வரவே மயக்கும் இருள்தனைப்
பையவே போக்கிப் பணிசெய்ய அருள்வாய்
முத்தமிழ் ஞானம் முழுதுந் தந்து
மோனஞானம் எளிதில் வரவே
புலனைந் தடக்கி பொறிவழிச் செல்லாது
புகழ்தரும் நினதருள் ஒளியைப் பெறவே
அகமகிழ்வுடனே அருள் செய்திடுவாய்
மாயை நீக்கி மனந்தனை யடக்கி
சேயேன் நின்பதந் தொழுவே அருள்வாய்.

## பிரியா விடை

[ தமிழாக்கம் — சோ. நடராஜன். ]

சந்தியாவந்தனம் வாழி தங்கள் முன்னர்
தண்டம் சமர்ப்பிக்கிறேன்
சந்த தமு நான்செயுந் திருமுழுக் கேசலாம்
சாற்றுகின் றேன்பல தரம்

வந்தித்து வந்த தேய்வங்களே பிதிரரே
வாழி தர்ப்பணமது செய
வகையில்லை யினியென்னை யின்றுமுதல் நீவிரும்
மன்னித்து விடவேண்டுமே

குந்தியோரு மூலையில் யாதவ குலத்தில் வரு
குமாரனைக் கோடிய கம்சன்
குடியோடு மாழக் குமைத்திட்ட கோபால
குருமணியை நாளும் நாளும்

சிந்தையிலிருத்தியே வாயார வாழ்த்தி நான்
செய்திட்ட பாபங்களைச்
சிதறி யோடச் செய்வ னிதுபோது மினி யென்ன
தேவையிவ் வையகத்தே.

—லீலாசுகர் – கிருஷ்ண கர்ணாமிர்தம்.

[ இரசங்களுக்கெல்லாம் ஆரம்பமும் முடிவுமாயிருப்பது சாந்தரசமென்பார்கள் அலங்கார சாத்திர மறிந்தவர்கள். லீலாசுகர் என்னும் பக்த சிகாமணி கிருஷ்ணாமிர்தத்தில் தம்மனம் சாந்தியடைந்திருப்பதை அவருடைய விருப்பத்தை வெளியிடும் வாயிலாக உணர்த்துகிறார். சந்தியா வந்தனமே! உனக்கு ஒரு நமஸ்காரம். மூன்று வேளையும் தவறாமல் செய்து வந்த ஸ்நானத்திற்கும் ஒரு வந்தனம். ஓ தேவர்களே! பிதிர்களே! உங்களுக்கும் நான்கைகூப்புகின்றேன். உங்களைச் சந்தோஷஞ் செய்ய என்னால் முடியாது. மன்னிக்கவேண்டும். நான் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்து ஆயர் குலத்துக்கு மகுடமணிபோன்ற கண்ணனை நினைத்து நினைத்து என் பாரங்களைப் போக்கிக்கொள்ளுகிறேன். அதுவே எனக்குப் போதும். மற்றது எனக்கு வேண்டாம் என்கிறார். இதுவே சாந்தத்தின் வெளித் தோற்றம். இதைக் கைப்பற்றுவதே ஒருவனை உத்தமனாய்ச் செய்துவிடும். ]

Regd. et the G. P. O. as a News Paper No. H. C. 59/300

# ஸ்ரீ இராமக் கிருஷ்ண விஜயம்

]1921-ம் ஆண்டிலிருந்து வெளிவருகிறது]

- ❋ தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் தமிழ் மக்கட்கெனச் சமயத் தொண்டு புரியும் மாதப் பத்திரிகை.
- ❋ பண்டிதரும் பாமரரும் இன்புறக் கூடியது.
- ❋ பேரன்பு, மெய்யறிவு, துறவு, ஆற்றல், சமரச நோக்கு, அன்பர்பணி முதலான உயர் நோக்கங்களை வாசிப்போரது உள்ளத் தெழுப்புவது.

வருடச் சந்தா ரூ. 3/-    தனிப்பிரதி அணா 6.

ஒவ்வொரு தொகுதியும் தை மாதத்திலிருந்து தொடங்குகிறது.
சந்தா தை அல்லது ஆடி மாதத்திலிருந்து தொடங்கலாம்

கிடைக்குமிடம்:

ஸ்ரீ ராமக்கிருஷ்ண மடம், மைலாப்பூர் சென்னை.

# ஆத்மசோதனை

இந்நூல், கவியோகி சுத்தானந்தரின் அற்புதமான சுயசரித்திரம்; அநுபவக் களஞ்சியம். ஒவ்வொருவரியும் புதுப் புதுக் கருத்துக்களும் உணர்ச்சிகளும் நிரம்பியது. கல்வி, கலை, கவிதை, தொழில், அரசியல், சமுதாய சீர்திருத்தம், சன்மார்க்கம், யோகம், ஆத்மசக்தி ஆகிய பலவேறு துறைகளில் தொண்டுசெய்தவர் யோகியார். அவரது சாதனங்கள், சித்திகள், பொன்மொழிகள் எல்லாம் இந்நூலில் அடங்கியுள்ளன. வாசகர் வாழ்வுக்குப் புதுமையும் பொலிவுந்தரும்.

625 பக்கங்கள். — விலை ரூபா ஆறு.

கிடைக்குமிடம்:

சுத்தானந்த நிலையம்.
புதுக்கோட்டை,
(தென்இந்தியா.)

இலங்கை சோல் ஏஜன்ஸ்:

எம். ஓ. முருகேசபிள்ளை அன் சன்ஸ்
நாவலப்பிட்டி.
(இலங்கை.)

கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன் - பதிப்பாசிரியர் நா. முத்தையா
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி இலங்கை
அச்சுப்பதிப்பு சாவண அச்சகம் நாவலப்பிட்டி 17-7-51